சுருக்கம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை – புதிய அறிவிப்புகள் – 2015–2016 ஆம் ஆண்டில் 205 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு முதலுதவிப் பெட்டி வாங்கி வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந 7) துறை

அரசாணை (நிலை) எண். 123 நாள் : 30.11.2015

மன்மத, கார்த்திகைத் திங்கள் 14 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்கப்பட்டது:-

ஆதி திராவிடர் நல இயக்குநரின் கடித ந.க.எண். த1/24827/2015, நாள் 28.09.2015.

******

ஆணை:–

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் 2015–2016 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை விவாதத்திற்கு பதில் அளிக்கையில் 16.09.2015 அன்று சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:-

> "பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு ஏற்படும் சிறு காயங்களுக்கு உடனடி சிகிச்சை அளித்திடும் பொருட்டு, 2014–15 இல் முதலுதவிப் பெட்டிகள் வழங்கிய 100 பள்ளிகள் தவிர்த்து இதர 206 பள்ளிகளுக்கும் முதலுதவிப் பெட்டிகள் ரூ.7 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்படும்."

2. மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்துவது தொடர்பாக மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் ஆதிதிராவிடர் நல இயக்குநர் விரிவான கருத்துருவினை அரசுக்கு அனுப்பியுள்ளார். ஆதி திராவிடர் நல இயக்குநரின் கருத்துருவில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் 1,314 ஆதி திராவிடர் நல விடுதிகளும், 42 பழங்குடியினர் நல விடுதிகளும், 306 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன என்றும், இவற்றில் மொத்தம் 1,31,754 மாணவ, மாணவியர்கள் தங்கி கல்வி பயின்று வருகிறார்கள் என்றும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளும், பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளும் பெரும்பாலும் கிராமப் பகுதிகளில் இயங்கி வருகின்றன என்றும், இந்த விடுதிகளிலும், பள்ளிகளிலும் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியர்கள் பள்ளிக்கு

செல்லும்போதும், விளையாடும் போதும், எதிர்பாராமல் ஏற்படும் சிறு, சிறு விபத்துகளுக்கு உடனடி சிகிச்சை அளித்திட அருகிலுள்ள கிராம சுகாதார நிலையத்திற்கு செல்ல வேண்டி உள்ளதென்றும், சில நிகழ்வுகளில் உடனடியாக கிராம சுகாதார நிலையம் செல்ல இயலாத சூழ்நிலைகளும் ஏற்படுகின்றன என்றும், இதுபோன்ற நிகழ்வுகளில் உடனடியாக சிகிச்சை அளிக்கும் பொருட்டு விடுதிகளிலும், பள்ளிகளிலும் முதலுதவிப் பெட்டி வைப்பது மிகவும் அவசியமாகிறது என்றும் தெரிவித்துள்ளார். மேலும், மாணாக்கர்களின் நலனை பாதுகாக்கும் வகையில் முதற்கட்டமாக 2014–2015 ஆம் ஆண்டில் 1,346 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளுக்கும், 100 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கும் தலா ஒரு முதலுதவிப் பெட்டி வீதம் வாங்கி வழங்கப்பட்டுள்ளது என்றும் ஆதி திராவிடர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. தற்போது, இரண்டாம் கட்டமாக, 2014–2015 ஆம் ஆண்டில் முதலுதவிப் பெட்டிகள் வாங்கி வழங்கப்பட்ட 100 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் நீங்கலாக மீதமுள்ள 206 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கும் 2015–2016 ஆம் நிதியாண்டில் தலா ஒரு முதலுதவிப் பெட்டி வீதம் வாங்கி வழங்கலாம் என்றும், இதன் பொருட்டு, தோராயமாக ஒரு முதலுதவிப் பெட்டியின் விலை ரூ.2400/– என்ற அடிப்படையில் தொடராச் செலவினமாக தோராயமாக ரூ.4.95 இலட்சமும் (ரூ.2400 x 206 பள்ளிகள்), அந்த முதலுதவிப் பெட்டிகளில், ஒவ்வொரு பெட்டிக்கும் கட்டு போடக்கூடிய பொருட்கள், பஞ்சு, அயோடின், டிங்ச்சர், கண் துளிமருந்து, ஒட்டுத் துணி, பாதுகாப்பு பின்கள், கத்தரிக்கோல், ஊசி, நூல், டார்ச் விளக்கு, இடுக்கி, பொட்டாசியம் பர்மாங்கனேட், பாராசிட்டமால் மாத்திரைகள், ஒரு சோப்பு, கைத்துண்டு, சாதாரண உப்பு, அமிர்தாஞ்சன் போன்ற மருந்து மற்றும் பொருட்களை ஒவ்வொரு ஆண்டும் வாங்க, ஒரு ஆண்டுக்கு ஒரு பள்ளிக்கு ரூ.1,000/– வீதம், தொடரும் செலவினமாக ரூ.2.06 இலட்சமும் (ரூ.1000 x 206 பெட்டிகள்) செலவாகும் என்றும் ஆதி திராவிடர் நல இயக்குநர் தெரிவித்து மேற்படி 206 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு தலா ஒரு முதலுதவிப் பெட்டி வீதம் திறந்தவெளி ஒப்பந்த முறையில் வாங்கி வழங்க ஆதி திராவிடர் நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கும்படியும், இதன் பொருட்டு, தொடராச் செலவினமாக தோராயமாக ரூ.4.95 இலட்சமும், தொடரும் செலவினமாக ரூ.2.06 இலட்சமும் ஒப்பளிக்கும்படி ஆதி திராவிடர் நல இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

4. ஆதி திராவிடர் நல இயக்குநரின் கருத்துரு அரசால் கவனமுடன் ஆய்வு செய்யப்பட்டது. மேற்படி 206 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் காடம்பாறை அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட தொடக்கப் பள்ளியில் மாணாக்கர்கள் இல்லாததால் இப்பள்ளியினை மூடி ஆணை பிறப்பிக்குமாறு பழங்குடியினர் நல இயக்குநரால் அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு பரிசீலனையில் உள்ளதால் இப்பள்ளி நீங்கலாக, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினைச் செயல்படுத்தும் வகையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் 205 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் ஒரு பள்ளிக்கு தலா ஒரு முதலுதவிப் பெட்டி வீதம் வாங்கி வழங்க ஆதி திராவிடர் நல இயக்குநருக்கு நிர்வாக ஒப்புதல் அளித்தும், இதன் பொருட்டு தொடராச் செலவினமாக ரூ.4,92,000/–மும் (ரூ.2400 x 205 பள்ளிகள்), தொடரும் செலவினமாக ரூ.2,05,000/–மும் (ரூ1000 x 205 பெட்டிகள்) ஆக மொத்தம் ரூ.6,97,000/–(ரூபாய் ஆறு இலட்சத்து தொன்னூற்று ஏழு ஆயிரம் மட்டும்) கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது :–

(i) இத்திட்டத்திற்கென வாங்கப்பட வேண்டிய முதலுதவிப் பெட்டிகள் தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப் புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–இன்படி விதிகளை அனுசரித்து வாங்க வேண்டும்.

(ii) அந்நிறுவனத்தால் நிர்ணயிக்கப்படும் விலை தோராய விலைக்கு கூடுதலாக இருக்கும்பட்சத்தில் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப முதலுதவிப் பெட்டிகளின் எண்ணிக்கையை கொள்முதல் செய்யவும், அதே சமயத்தில் விலை குறைவாக இருக்கும் பட்சத்தில், அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையில் முதலுதவிப் பெட்டிகள் வாங்கியபின் மீதத் தொகை இருப்பின் அரசுக்கு உடனடியாக செலுத்தப்படுதல் வேண்டும்.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் கணக்கு தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

| வ. எண். | கணக்குத் தலைப்பு | பள்ளிகளின் எண்ணிக்கை | தேவைப்படும் நிதி ஒதுக்கீடு (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | "2225–ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்–02 பழங்குடியினர் நலன்–277 கல்வி– I. திட்டத்தில் சேராதது–AA – பள்ளிகள் – 24 பொருட்களும் வழங்கலும் (கு.தொ.கு.2225 02 277 AA 2408)" | பள்ளிகள் 157 X ரூ.3400 | ரூ.5,33,800/– |
| 2 | "2225–ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்–02 பழங்குடியினர் நலன்–277 கல்வி–பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்– II மாநிலத் திட்டம் AW மாணவர் இல்லம் இணைந்த பழங்குடியினர் பள்ளிகளைத் தொடங்குதலும், பராமரித்தலும்–24 பொருட்களும் வழங்கலும் (கு.தொ.கு.2225 02 277 AW 2404)" | பள்ளிகள் 48 X ரூ.3400 | ரூ.1,63,200/– |
| | மொத்தம் | பள்ளிகள் 205 | ரூ.6,97,000/– |

6. மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2015–2016 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 4–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட ஆதி திராவிடர் நல இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், பத்தி 4–இல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2015–2016 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (ஆதி(ம)பந) துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆதி திராவிடர் நல இயக்குநர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

7. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை அதில் தெரிவித்துள்ள நிபந்தனைகள் மற்றும் நடைமுறையில் உள்ள விதிமுறைகளை பின்பற்றி இயக்கக அளவில் ஒருமுகப்படுத்தப்பட்ட ஒப்பந்தப்புள்ளி (Centralised Tender) மூலம் முதலுதவிப் பெட்டிகளை வாங்கி சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் மூலமாக பள்ளிகளுக்கு வழங்க ஆதி திராவிடர் நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

8. 205 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கும் முதலுதவிப் பெட்டிகள் வாங்கி வழங்கப்பட்ட பின்னர் உரிய அறிக்கையை தவறாமல் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. ஆண்டுதோறும், முதலுதவிப் பெட்டியினை புதுப்பித்திட ஆகும் செலவினத்தை வரவு–செலவு திட்ட நிதியொதுக்கம் மூலம் மேற்கொள்ளும் வகையில் உரிய முன்மொழிவினை அரசின் நிதித் (வரவு–செலவு) துறைக்கு நேரடியாக அனுப்புமாறு ஆதி திராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இவ்வாணை, அலுவல் சார்பற்ற எண்.64433/ஆதி(ம)பந/2015–1, நாள் 27.11.2015–இல் நிதித்துறையின் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1435 (ஆயிரத்து நானூற்று முப்பத்து ஐந்து).

( ஆளுநரின் ஆணைப்படி )

ப. அண்ணாமலை
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், ஆதி திராவிடர் நலன், சென்னை– 5.
இயக்குநர், பழங்குடியினர் நலன்,சென்னை – 5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 8.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை – 18 / 35 (பெயரில்)
நகல்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
அமைச்சர், (ஆதி(ம)பந) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதி(ம)பந துறை செயலர் அவர்களின் முதுநிலை தனிச்செயலர், சென்னை–9.
நிதித்(ஆதி(ம)பந) (வ.செ. பொது–II)துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்கள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 1/12/15